9

**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. S.V. GRANITES MULTICOLOUR GRANITE QUARRY LOCATED AT S.F.No. 1124/7(P), 1130/7(P), 1131/7 and 1131/8 LEASE OVER AN EXTENT OF 1.91.50 HA LOCATED AT IRUDUKOTTAI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 05.04.2023 AT 11.00 AM AT M/S.SRI CHOWDESHWARI CONVENTION HALL, ANCHETTY MAIN ROAD, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT– 635107.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Saranya, I.A.S., | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. V. Deenadayalan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Thiru. B.Chinnasamy and<br>Thiru. B. Sudakar | : | The Proponents<br>M/s.S.V.Granites Multicolour Granite Quarry |
| 5 | Thiru.R.Rajendran | : | EIA Consultant,<br>M/s. Ecotech labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 56 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. S.V. Granites Multicolour Granite Quarry project over an extent of 1.91.50 Ha at S.F.No. 1124/7(P), 1130/7(P), 1131/7 and 1131/8, Irudukottai village, Denkanikottai Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 05.03.2023 and bit notices regarding public hearing was issued to the public of Irudukottai Village, Thorttikuppam Village, Vanniyapuram Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed Multi Coloured Granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.R.Rajendiran, EIA Consultant, M/s. Ecotech labs Pvt Ltd, Chennai of the proposed Multi Coloured Granite quarry project has made presentation about the proposed Multi Coloured Granite Quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited

the public to express their views and comments about the proposed Multi Coloured Granite quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Baskaran, Irudukottai Village:**

Thiru. Baskaran has said that, In ancient time, blasters and burners were used to mine out the granite. The EIA Consultant of the proposed quarry project stated that, modern technologies to be used to mine out the granite and ensure the same and he requested that job opportunity to be given to the local people.

**Answer:**

Thiru. R. Rajendran M/s. Ecotech labs Pvt Ltd, Chennai EIA consultant of the proposed multi colour granite quarry has informed that, explosives are not used during the operation of the quarry and only wire cutting method to be used. So, there is no impact to the surrounding area.

He also said that, the proposed granite quarry project to be provided job opportunities to the 20 to 30 people directly and indirectly.

**2. Thiru. Mathesh, Irudukottai Village:**

Thiru. Mathesh has said that, during construction of the road work in the village, the project management is providing sand and also help to the construction of school compound wall. Further, he said that, no objection to the quarry project.

**3. Thiru. Saravanakumar, Irudukottai Village:**

Thiru. Saravanakumar has requested that, job opportunity to be given through this proposed project.

**The Sub Collector, Hosur:**

The Sub Collector, Hosur has requested the people of Irudukottai village to express their positive and negative features to the proposed project.

**Thiru. Saravanakumar, Irudukottai Village:**

Again, Thiru. Saravanakumar has said that, no objection for the establishment of proposed quarry project and requested to give job opportunity.

4. **Thiru. Ravi, Thottikuppam Village:**

Thiru. Ravi has requested that, job opportunity to be given to the local educated people and requested to provide facilities, amenities to the village schools.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 14 number of petitions were received on the proposed M/s. S.V.Granites Multi colour Granite Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Multi Coloured Granite quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

10/4/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

10/07/23

**Sub Collector**
**Hosur**

5/7

**District Collector**
**Krishnagiri**

5/7

7

**<u>தி/ள்.எஸ்.வி. கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி, ச. எண். 1124/7(பகுதி), 1130/7(பகுதி), 1131/7 & 1131/8, இருதுக்கோட்டை கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம்,கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கிரானைட் குவாரி 1.91.50 ஹெக்டர் பரப்பளவில் நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 05.04.2023 அன்று அஞ்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ சௌடேஸ்வரி கன்வென்சன் ஹாலில் (கல்யாண மண்டபம்) முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:</u>**

<u>பங்கேற்றோர்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R. சரண்யா, I.A.S., | : | சார் ஆட்சியர், ஓசூர்,<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.V.தீனதயாளன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.B.சின்னசாமி மற்றும்<br>திரு. B. சுதாகர் | : | உரிமையாளர்கள்<br>**தி/ள்.எஸ்.வி. கிராணைட்ஸ் பல வண்ண** கிரானைட் குவாரி, |
| 5 | திரு. R. ராஜேந்திரன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 56 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திு/ள். எஸ்.வி. கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் தி/ள். எஸ்.வி. கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரியின் உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 05.03.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், இருதுக்கோட்டை, தொட்டியகுப்பம், வன்னியபுரம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். எஸ்.வி. கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். எஸ்.வி. கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. R. ராஜேந்திரன், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. பாஸ்கரன், இருதுக்கோட்டை** கிராமம்:

திரு பாஸ்கரன் அவர்கள், பழங்காலத்தில் கிரானைட் கற்களை வெட்டி எடுக்க வெடிகள் மற்றும் பர்னர்கள் பயன்படுத்தினார்கள். தற்போது, இக்குவாரி திட்டத்தில் நவீன தொழிற்நுட்பங்களுக்கு மாறியுள்ளதாக உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் நிழற்படம் மூலம்

தெரிவித்தனர். அதனை உறுதி செய்யவேண்டும் என்றும் இத்திட்டத்தினால் உள்ளூர் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும் என்று கூறினார்.

**பதில் :**

உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.R.ராஜேந்திரன், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள், இக்குவாரி செயல்பாட்டின் போது வெடிகள் பயன்படுத்தப்படுவதில்லை. ஒயர் கட்டிங் முறை (Wire Cutting) மட்டுமே பயன்படுத்தப்படயுள்ளதால் சுற்றியுள்ள பகுதிகிளில் எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்று தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தினால் சுமார் 20 முதல் 30 உள்ளூர் நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

**2. திரு. மாதேஷ், தொட்டியக்குப்பம் கிராமம், இருதுக்கோட்டை பஞ்சாயத்து:**

திரு.மாதேஷ் அவர்கள், தங்களது கிராமத்திற்கு சாலை வசதி செய்யும் பொழுது இந்நிறுவனத்தினர் மணல் தருவதாக தெரிவித்தனர் மற்றும் பள்ளியின் சுற்றுச்சுவரை அமைக்க உதவி செய்தனர். மேலும், இக்குவாரி திட்டத்திற்கு எவ்வித ஆட்சபேனையும் இல்லை என்று தெரிவித்தார்.

**3. திரு. சரவணகுமார், இருதுக்கோட்டை கிராமம்:**

திரு. சரவணகுமார் அவர்கள், இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

**சார் ஆட்சியர், ஒசூர் அவர்கள் :**

சார் ஆட்சியர், ஒசூர் அவர்கள், இருதுக்கோட்டை கிராமத்திற்குட்பட்ட மக்களை உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தினால் ஏற்படும் சாதக, பாதக அம்சங்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திரு. சரவணகுமார், இருதுக்கோட்டை கிராமம்:**

திரு. சரவணகுமார் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டம் அமைவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

**4. திரு. ரவி, தொட்டியகுப்பம் கிராமம்:**

திரு. ரவி அவர்கள், உள்ளூரில் படித்தவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று தெரிவித்தார். மேலும், இக்கிராமத்திலுள்ள பள்ளிகளுக்கு வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். எஸ்.வி. கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 14 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். எஸ்.வி. கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட

சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

10/4/2023

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

10/4/23

**சார் ஆட்சியர்**
**ஓசூர்**

4/7

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**

4/7